சுயமரியாதை திருமணம் செய்து வைக்கும் வழக்கறிஞர்கள் மீது நடவடிக்கை

பார் கவுன்சிலுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

● மதுரை

சுயமரியாதை திருமணம் செய்து வைக்கும் வழக்கறிஞர்கள் மீது பார் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் மோர்பண்ணையைச் சேர்ந்த இளவரசன், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல்செய்த ஆள்கொணர்வு மனு: மோர்பண்ணையைச் சேர்ந்த பெண்ணை காதலித்து வந்தேன். அவருக்கு 16 வயதில் அவருடைய தாய்மாமாவுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் முடிவு செய்தனர். இது குறித்து மாவட்ட குழந்தைகள் நல மையத்துக்கு புகார் அளித்தேன். அதிகாரிகள் அனைவரையும் அழைத்து விசாரித்து சிறுமிக்கு திருமணம் செய்து வைக்கக் கூடாது என பெற்றோரிடம் எழுதி வாங்கி அனுப்பினர்.

இருப்பினும் அதை மீறி அவரை பிளஸ் 1 படிப்பை பாதியில் நிறுத்தி, தாய் மாமாவுக்கு திருமணம் செய்து வைத்தனர். இதனால் அவர் வீட்டை விட்டு வெளியேறி எனது வீட்டுக்கு வந்து என்னை திருமணம் செய்ய விருப்பம் தெரிவித்தார். நானும், அவரும் திருப்பூரில் வழக்கறிஞர் ஒருவர் நடத்தி வரும் அம்பேத்கர் சுயமரியாதை திருமண மையத்தில் சுயமரியாதைத் திருமணச் சட்டம், இந்து திருமணச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்டோம்.

இந்நிலையில், பெண்ணை நான் கடத்தியதாக அவரது பெற்றோர் திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். விசாரணைக்கு இருவரும் ஆஜரானோம். பின்னர் எனது மனைவியை, 'பாட்டி முடியாமல் இருப்பதால் அவரைப் பார்த்துவிட்டுச் செல்லுமாறு' கூறி அழைத்துச் சென்றனர். அதன் பிறகு அவரை வீட்டைவிட்டு அனுப்பாமல் தனி அறையில் சிறை வைத்தனர். இப்போது எனது மனைவியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, எனது மனைவியை மீட்டு ஆஜர்படுத்த உத்தரவிட வேண்டும்.

இந்த மனு நீதிபதிகள் தண்டபாணி, விஜயகுமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், 'சம்பந்தப்பட்ட பெண்ணை கடத்தியதாக ஏற்கெனவே ஒரு முறை புகார் அளிக்கப்பட்டது. அப்போது அந்தப் பெண்ணிடம் விசாரணை நடத்தியபோது தன்னை யாரும் கடத்தவில்லை, என்றார். இதனால் அவரை பெற்றோருடன் போலீஸார் அனுப்பி வைத்தனர். குழந்தைத் திருமணமாக இருந்தாலும், அந்தத் திருமணத்தை ரத்து செய்த பிறகே மறுமணம் செய்ய முடியும் என்றார்.

இதையடுத்து ஆவணங்களைப் பார்வையிட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள் சுயமரியாதை திருமணம் செய்து வைக்க முடியாது என உயர் நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது. இதனால் மனுதாரருக்கு சுயமரியாதை திருமணம் செய்து வைத்த வழக்கறிஞருக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரணை நடத்தி அவர் மீது தமிழ்நாடு-புதுச்சேரி பார் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வழக்கறிஞர்கள் வேறு யாரேனும் இவ்வாறு செயல்படுவது தெரியவந்தால் அவர்கள் மீதும் பார் கவுன்சில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

பழநி ரெணகாளியம்மன் கோயிலில் அன்னாபிஷேகம்

● பழநி

பழநி ரெணகாளியம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவையொட்டி, நேற்று அன்னாபிஷேகம் நடைபெற்றது.

பழநியில் புதுதாராபுரம் சாலையில் உள்ள ரெணகாளியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா கடந்த ஏப்ரல் 25-ல் முகூர்த்தகால், சாமி சாட்டுதலுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. மே 2-ம் தேதி இரவு காணியாளர் செல்வராஜ் கவுண்டர் இல்லத்திலிருந்து பொன் ஆபரணப் பெட்டி எடுத்து வருதலும், புனித கிணற்று நீரில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை செய்து, வாணவேடிக்கையுடன் சக்தி கரகம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

விழாவையொட்டி, திரளான பக்தர்கள் அக்னிச் சட்டி எடுத்து வந்தும், பொங்கல் வைத்தும் தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர். நேற்று மாலை 4.30 மணிக்கு அன்னாபிஷேகம் மற்றும் சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன. இதில், ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

மதுரை வந்த புண்ணிய தீர்த்த யாத்திரை ரயிலுக்கு வரவேற்பு

கொடியசைத்து தொடங்கி வைத்த கோட்ட மேலாளர்

● மதுரை

மதுரைக்கு வந்த புண்ணிய தீர்த்த யாத்திரை ரயிலை வரவேற்று, மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நாட்டின் கலாசாரம், புண்ணிய தலங்களுக்கான சுற்றுலாவை ஊக்குவிக்கும் விதமாக, 'பாரத் கவுரவ் டூரிஸ்ட்' என்ற ரயில் இயக்கப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கான இந்த ரயிலில், 3 மூன்றடுக்கு ஏசி பெட்டிகள், 8 ஸ்லீப்பர் பெட்டிகள், 1 பேன்ட்ரி கார், 2 பவர் கார் என மொத்தம் 14 பெட்டிகள் உள்ளன.

இதன் முதல் ஓட்டத்தில், ஐஆர்சிடிசி என்ற இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் தென் மண்டலம், மதுரை, திருச்சி ஆகியவை இணைந்து, புண்ணிய தீர்த்த யாத்திரை என்ற பெயரில் புண்ணிய தலங்களுக்கான சுற்றுலாப் பயணத்தை தொடங்கியுள்ளது. வாரணாசி உள்ளிட்ட முக்கிய புண்ணிய தலங்களுக்குச் செல்லும் இந்த ரயில், மே 4-ம் தேதி கொச்சுவேலியிலிருந்து பயணத்தை தொடங்கியது. இந்த சிறப்பு சுற்றுலா ரயிலில் மொத்தம் 591 பயணிகளில், மதுரையிலிருந்து 74 பயணிகளும், ராஜபாளையத்திலிருந்து 125 பயணிகளும் பயணிக்கின்றனர். மதுரை வந்த இந்த ரயிலுக்கு நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ப.அனந்த், கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், ஐஆர்சிடிசி பாசித் அகமது (பகுதி மேலாளர்) மற்றும் நிலைய மேலாளர் பி.லிங்கேஸ்வரன், மக்கள் தொடர்பு அதிகாரி கோபிநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

↑ மதுரையில் புண்ணிய தீர்த்த யாத்திரை சிறப்பு ரயிலை கொடியசைத்து தொடங்கி வைத்த கோட்ட மேலாளர் அனந்த்.

↑ திண்டுக்கல்லில் மார்க்சிஸ்ட் சார்பில் நடந்த செஞ்சட்டை பேரணியில் பங்கேற்ற மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், சு.வெங்கடேசன் எம்.பி. உள்ளிட்டோர். நகரின் முக்கிய சாலைகள் வழியாக சென்ற பேரணி மணிக்கூண்டை அடைந்தது. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.சச்சிதானந்தம் தலைமை வகித்தார்.

மதுரை சித்திரை திருவிழாவில்

மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தந்த போலீஸ்

என்.சன்னாசி

● மதுரை

இந்த ஆண்டு சித்திரைத் திருவிழாவில் பொதுமக்களுக்கான பாதுகாப்புக்கு கூடுதல் முக்கியத்துவத்தை காவல் துறை அளித்தது.

கடந்த ஆண்டு சித்திரைத் திருவிழாவின்போது கோரிப்பாளையம் பகுதியில் கூட்ட நெரிசலில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர். இந்த ஆண்டு அதுபோன்ற சம்பவங்கள் நடந்துவிடக் கூடாது என்பதில் மாநகர காவல் ஆணையர் நரேந்திரன் நாயர் உள்ளிட்ட அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தினர்.

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் ஆழ்வார்புரம் மற்றும் கோரிப்பாளையம் பகுதியில் கூடும் பக்தர்கள் நெரிசலில் சிக்காமல் சுவாமியை தரிசிக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆழ்வார்புரத்தில் கள்ளழகர் செல்லும் வழியில் இருபுறமும் தேவையின்றி மக்கள் உள்ளே வராதபடி தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஆற்றுப் பகுதிக்கு அவசியமின்றி போலீஸ் அல்லது விஐபிக்களின் வாகனங்கள் வருவது தடுக்கப்பட்டது. நவீன கேமராக்கள் பொருத்தப்பட்ட ட்ரோன்கள் மூலம் கண்காணிப்பை போலீஸார் தீவிரப்படுத்தினர். பல்வேறு இடங்களில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது.

இதுகுறித்து போலீஸார் கூறுகையில், 'மீனாட்சி கோயிலில் நடக்கும் சித்திரைத் திருவிழா நிகழ்ச்சிகளைவிட, கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வை காண கிராமப்புறங்களில் இருந்தும் ராமநாதபுரம், சிவகங்கை போன்ற வெளி மாவட்டங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் அதிகமாக கூடுவர். இதனால் தல்லாகுளம், கோரிப்பாளையம், வைகை ஆற்றுப் பகுதியில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தோம். கள்ளழகர் திருவிழாவுக்காக வெளி மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட போலீஸார் உட்பட 5 ஆயிரம் பேர் பணியில் ஈடுபட்டனர். நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வைகையில் கள்ளழகர் இறங்கும் விதமாக மண்டகப்படிகளில் முன்கூட்டியே எழுந்தருள ஏற்பாடு செய்யப்பட்டது. இது போன்ற நடவடிக்கைகளால் கூட்ட நெரிசல் ஏற்படவில்லை.

ஆனால், துரதிருஷ்டவசமாக வைகை ஆற்று தடுப்பணை நீரில் மூழ்கி 3 பேர் உயிரிழந்துவிட்டனர். தடுப்பணையில் தண்ணீரை தேக்காமல் வெளியேற்றிருந்தால் இந்த அசம்பாவிதத்தை தவிர்த்திருக்கலாம் என்று தெரிவித்தனர்.

வத்தலகுண்டு அருகே மாட்டுவண்டி பந்தயம்

● வத்தலகுண்டு

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே ஜி.தும்மலப்பட்டி கிராமத்தில் முத்தாலம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவையொட்டி இரட்டை மாட்டு வண்டி பந்தயம் நடைபெற்றது.

பெரியமாடு, நடுமாடு, பூஞ்சிட்டு என 3 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. 50-க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன. ஜி.தும்மலப்பட்டி தொடங்கி வத்தலகுண்டு புறவழிச் சாலை வரை மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது.

பரிசளிப்பு விழாவில் வத்தலகுண்டு திமுக ஒன்றியச் செயலாளர் கே.பி.முருகன், பேரூராட்சித் தலைவர் சிதம்பரம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வைகை ஆற்றில் மூழ்கி 3 பக்தர்கள் உயிரிழப்பு

கூட்ட நெரிசலில் மயங்கி விழுந்த பக்தரும் மரணம்

● மதுரை

மதுரை சித்திரை திருவிழாவின்போது வைகை ஆற்று நீரில் மூழ்கி 3 பக்தர்கள் உயிரிழந்தனர். நேர்த்திக்கடன் செலுத்து வந்த பக்தர் ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்தார்.

மதுரை சித்திரைத் திருவிழாவின் கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளியதை பக்தர்கள் முண்டியடித்து தரிசித்தனர். ஆழ்வார்புரம் பகுதியே பக்தர்கள் வெள்ளத்தில் மிதந்தது. அப்போது உற்சாக மிகுதியால் யானைக்கல் தரைப்பாலம் அருகிலுள்ள தடுப்பணையில் தேங்கிய தண்ணீரில் பக்தர்கள் சிலர் குதித்து விளையாடினர்.

கள்ளழகர் ஆற்றில் இறங்கிய பின் தடுப்பாணை பகுதியில் ஆண் உடல் ஒன்று மிதந்தது தெரியவந்தது. போலீஸார் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினர். விசாரணையில், அவர் மதுரை தெற்குமாசி வீதியைச் சேர்ந்த நல்லமாயன் என்றும் திருவிழா பார்க்க வந்தபோது, தடுப்பணை நீரில் மூழ்கி உயிரிழந்தாக தெரிகிறது.

இதற்கிடையே, நேற்று மதியம் வைகை ஆறு தடுப்பணை பகுதியில் மேலும் இருவரின் உடல் நீரில் மிதப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து இருவரின் உடல்கள் மீட்கப்பட்டன. இதில் ஒருவர் மதுரை விளாச்சேரி சுண்ணாம்பு காளவாசல் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் மகன் பிரேம்குமார்(18) என தெரிந்தது. மற்றொருவரின் பெயர், முகவரி குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர். இவர்களும் சித்திரைத் திருவிழாவுக்கு வந்தவர்கள் என போலீஸார் தெரிவித்தனர்.

மதுரை வடக்குமாசி வீதி நல்லமாடன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் ஆட்டோ ஓட்டுநர் சுடலைமுத்து(58). வேண்டுதலை நிறைவேற்றும்விதமாக இவர், மதிச்சியம் பகுதியில் சுவாமிக்கு முன்பாக துருத்திப் பை மூலம் நெரிசலில் நின்றபடி தண்ணீர் பீய்ச்சிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென மயங்கி விழுந்தார். அவரை அருகிலிருந்தவர்கள் மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அவர் வழியிலேயே உயிரிழந்தது தெரிந்தது. இதுகுறித்து மதிச்சியம் போலீஸார் விசாரிக்கின்றனர்.

யானைக்கல் பகுதியில் தடுப்பணை கட்டுவதற்கு முன்பாக பக்தர்கள் எளிதில் சென்று கள்ளழகரை தரிசனம் செய்து வந்தனர். தடுப்பணை கட்டிய பிறகு அதில் தண்ணீர் நிரம்பிக் காணப்படுவதால் பக்தர்கள் அதில் மூழ்கி இறக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே, சித்திரைத் திருவிழா நேரத்தில் தடுப்பணையில் தண்ணீர் தேங்காதவாறு ஷட்டரை திறந்து வைக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

↑ கும்பக்கரை அருவியில் குளித்து மகிழ்ந்த சுற்றுலாப் பயணிகள்.

நீர்வரத்து சீரானது

கும்பக்கரை அருவியில் குளிக்க அனுமதி

● பெரியகுளம்

கும்பக்கரை அருவியில் நீர்வரத்து சீரானதால், சுற்றுலாப் பயணிகள் நேற்று முதல் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே உள்ளது கும்பக்கரை அருவி. மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் வட்டக்கானல், வெள்ளகெவி உள்ளிட்ட பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, கடந்த மாதம் 28-ம் தேதி இந்த அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால், பாதுகாப்பு கருதி அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2 நாட்களாக மழை குறைந்ததால், அருவியிலும் வெள்ளப்பெருக்கு குறைந்தது. இதைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் அருவியில் குளிக்க நேற்று முதல் அனுமதி அளிக்கப்பட்டது. எனவே, ஏராளமானோர் அருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், நேற்று முதல் அருவியில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது கோடை விடுமுறை என்பதால், அடுத்தடுத்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றனர்.

ரயிலில் அடிபட்டு இளைஞர் உயிரிழப்பு

● பழநி

பழநி சிவகிரிப்பட்டியை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியர் அரவிந்த் (20). இவர் நேற்று மாலை அப்பகுதியில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளுக்கு அருகே ரயில் தண்டவாளத்தை கடக்க முயன்ற போது, கோவையில் இருந்து மதுரை சென்ற ரயில் மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். பழநி ரயில்வே போலீஸார் விசாரிக்கின்றனர்.

ராமேசுவரம், தேனி, போடி உள்ளிட்ட 14 நகராட்சிகளின் தரம் உயர்வு தமிழக அரசு அறிவிப்பு

● சென்னை

தமிழகத்தில் ராமேசுவரம், வேதாரண்யம், திருவாரூர், தென்காசி உள்ளிட்ட 14 நகராட்சிகளின் தரத்தை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக நகராட்சிகள் சட்டத்தில் சமீபத்தில், திருத்தங்கள் செய்து அறிவிக்கை வெளியிடப்பட்டது. குறிப்பாக, மக்கள் தொகை, வருவாய் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தரத்தை உயர்த்துவது குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் தமிழகத்தில் தற்போது 14 நகராட்சிகளின் தரத்தை உயர்த்தி நகராட்சி நிர்வாகத்துறை உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகத்துறை செயலர் சிவ்தாஸ் மீனா அரசிதழில் வெளியிட்ட அறிவிக்கையில் கூறியிருப்பதாவது:

திருப்பூர் மாவட்டம் காங்கயம், திருமுருகன் பூண்டி, நாகப்பட்டினம்- வேதாரண்யம், ராமநாதபுரம்- ராமேசுவரம், அரியலூர்- ஜெயங்கொண்டம் ஆகிய 2-ம் நிலை நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

அதே போல், கள்ளக்குறிச்சி, திருவாரூர், தென்காசி, தேனி- போடிநாயக்கனூர், திருப்பூர்- தாராபுரம் ஆகிய 5 முதல் நிலை நகராட்சிகள் தேர்வு நிலை நகராட்சிகளாகவும், 2-ம் நிலை நகராட்சியான பெரம்பலூரை தேர்வு நிலை நகராட்சியாகவும், விழுப்புரம், மயிலாடுதுறை, தேனி - அல்லிநகரம் ஆகிய மூன்று தேர்வு நிலை நகராட்சிகளை சிறப்பு நிலை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நகரில் நடப்பவை

மதுரை

- கள்ளழகர் சித்திரைத் திருவிழா ஆறாம் நாள், மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளித்தல், தேனூர் மண்டபம், வண்டியூர், நண்பகல் 12.
- ஆன்மிக சொற்பொழிவு, மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்காடி வீதி, இரவு 7.
- சாலையோரக் குழந்தைகளுக்கான குதூகல முகாம், விடியல் தொண்டு நிறுவனம், கெனட் நகர் முத்துப்பட்டி, காலை 9.

TAMIL NADU OPEN UNIVERSITY
No. 577, Anna Salai, Saidapet, Chennai-600 015, Phone: (91-44) 2430 6645 / 6643
Emai: registrar@tnou.ac.in; website: www.tnou.ac.in

TNOU/Estt/Rect.-Asst.Prof./Consolidated/01-2023 May 06, 2023

NOTIFICATION
APPOINTMENT OF ASSISTANT PROFESSORS
(On Consolidated Basis)

Applications (4 copies) are invited from qualified and experienced individuals for the post of **Assistant Professors**, for various discipline in Tamil Nadu Open University, Chennai on consolidated basis (Temporary). For applications and other details refer TNOU website: **www.tnou.ac.in.**

DIPR/462/DISPLAY/2023 REGISTRAR

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

PARAS
பிரித்வி சொத்து சீரமைத்தல் மற்றும் புனரமைத்தல் கம்பெனி லிமிடெட்
பதிவு மற்றும் கார்பரேட் அலுவலகம் : க.எண்.1-55, ராஜா பிரசாதமு, 4வது தளம், விங்-1, மஸ்ஜித் பாண்டா சாலை, கொண்டாபூர், ஐதராபாத்-500084. CIN: U67120TG2007PLC053327, Tel: 040- 41413333, Fax: 040-41413301, E-mail: co@paras.org.in, Web: www.paras.org.in

M/s. KMM டிரேடர்ஸ் கணக்கின் அசையா சொத்திற்கான மின்-ஏலம் விற்பனை

2002-ம் ஆண்டு (அமலாக்கம்) அடமான வட்டி விதி 9(1)-ன்கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) அடமான வட்டி விதிகள் 8(6)-ன் கீழ் M/s. KMM டிரேடர்ஸ் கணக்கின் அசையா சொத்து விற்பனை பற்றிய மின்ஏல விற்பனை அறிவிப்பு

இந்த அறிவிப்பானது கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்கள் அடமானத்திற்கான பொது மக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர், அடமானதாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/களுக்கு குறிப்பாகவும், கடன் அளித்தவரால் அறிவிக்கப்படும் அறிவிப்பாகும், M/s. பிரித்வி சொத்து சீரமைத்தல் மற்றும் புனரமைத்தல் கம்பெனி லிமிடெட் (PARAS)-யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை ஆக்கபூர்வ சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். M/s. KMM டிரேடர்ஸ், அதன் பிரதிநிதி உரிமையாளர் திரு. K.M. மணிகண்டன் மற்றும் திருமதி. M. அனிதா (ஜாமீன்தாரர்) ஆகியோர் கடன் அளித்தவர் அதாவது PARAS-க்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 30.04.2023 அன்றைய தேதியில் ரூ.8,25,01,265/- (ரூபாய் எட்டு கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து ஆயிரத்து இருநூற்றி அறுபத்தி ஐந்து மட்டும்) மற்றும் வட்டி மற்றும் கட்டணங்கள் வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு மற்றும் எந்தநிலையில் உள்ளதோ அதேநிலையில்" எனும் அடிப்படையில் 08.06.2023 அன்று ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

அசையா அடமான சொத்துக்கள் விவரம்

ரிசர்வ் தொகை : ரூ.1,27,50,000/- முன்வைப்புத் தொகை : ரூ.12,75,000/-

திண்டுக்கல் மாவட்டம், பழநி தாலுகா, பழநி கிராமம், டி.எஸ்.எண்.1197/2, மனை எண்கள். 12, 13, 14 மற்றும் 15 மற்றும் மனை எண்கள்.5 மற்றும் 16, வார்டு எண்.4, பிளாக் எண்.15, கவுண்டர்இடேரி, பழநி, திண்டுக்கல் மாவட்டத்திற்குட்பட்ட சொத்து, பரப்பளவு 10840 சதுர அடி. மனை எண்கள். 12, 13, 14, 15 பரப்பளவு 5,740 சதுர அடியின் பின்வரும் எல்லைகள் : வடக்கு : மனை எண். 6, 7, 8, 9 கற்பகம் சொத்து, தெற்கு : 20 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு : மனை எண்.16, மேற்கு : மனை எண்.11. மனை எண்கள். 5 மற்றும் மனை எண்.16 பரப்பளவு 5,100 சதுர அடி (மனை எண்.5 பரப்பளவு 3,050 சதுர அடி மற்றும் மனை எண்.16 பரப்பளவு 2,050 சதுர அடி) : வடக்கு : அண்ணாமலை மில், தெற்கு : 20 அடி அகல கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு : அண்ணாமலை மில், மேற்கு : மனை எண்.15, மனை எண்.6 மற்றும் 20 அடி அகல கிழக்கு மேற்கு வழி.
மொத்த நிலத்தின் பரப்பு 10,840 சதுர அடி.

விருப்பமுள்ள ஏலதாரர் சொத்தினை 01.06.2023 அன்று காலை 11.00 மணியிலிருந்து மாலை 02.00 மணிக்கிடையில் மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் சொத்துக்களை பார்வையிடலாம்.
மின்-ஏலத்தின் தேதி, ஏலப் படிவம் சமர்ப்பிக்கும் கடைசி தேதி, ரிசர்வ் தொகை, முன்வைப்புத் தொகை, ஏல உயர்வு தொகை மற்றும் மின்-ஏலத்தின் நேரம் ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:
ஏலம் பின்வரும் முகவரியில் 08.06.2023 அன்று மாலை 02.30 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை நடைபெறும்.
M/s. பிரித்வி சொத்து சீரமைத்தல் மற்றும் புனரமைத்தல் கம்பெனி லிமிடெட், பதிவு மற்றும் கார்பரேட் அலுவலகம் : க.எண்.1-55, ராஜா பிரசாதமு, 4வது தளம், விங்-1, மஸ்ஜித் பாண்டா சாலை, கொண்டூர், ஐதராபாத் - 500084.

வ. எண்.	ரிசர்வ் தொகை	முன்வைப்புத் தொகை	ஒப்பந்தம் சமர்பிக்கும் கடைசி நாள்	மின்-ஏலம் நாள்	ஒப்பந்தம் திறக்கும் நேரம் மற்றும் இடைப்பட்ட ஏலம்	ஏல உயர்வு
1	ரூ.1,27,50,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	ரூ.12,75,000/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)	08.06.2023 மாலை 02.00 மணி அல்லது அதற்கு முன்பாக	08.06.2023 (வியாழன் கிழமை)	மாலை 2.30 மணி முதல் மாலை 3.00 மணி	ரூ.3.00 இலட்சம்

வில்லங்கம்/வழக்குகளின் விவரம் :

வ. எண்.	வழக்கு எண்.	இடம்	தற்போதைய நிலை
1	SA 12/2019	கடன்கள் மீட்பு தீர்ப்பாயம், மதுரை	நிலுவை
2	SA 265/2015	கடன்கள் மீட்பு தீர்ப்பாயம், மதுரை	நிலுவை
3	SA 136/2023	கடன்கள் மீட்பு தீர்ப்பாயம், மதுரை	நிலுவை

விருப்பமுள்ள பங்கேற்பாளர்கள்/ஏலதாரர்கள் ஏலம் விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளம் www.paras.org.in/tenders வழியாக தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நாள் : 04.05.2023 இடம் : ஐதராபாத் Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE
I, PRABHA Daughter of Thiru. MUTHU born on 01.11.1988 (Native District: Madurai) residing at Door No.155, Murugan Kovil Cross Street, Sathyasai Nagar, T.V.S.Nagar, Madurai-625003 shall henceforth be known as JOTHI.M
PRABHA

பொது

சுற்றுலா

5 ஷீரடி பண்டரிபுரம் மந்திராலயம், மினி தாய்லாந்து, எல்லோரா மே 21, ஜூன் 11, ஜூலை 2
9 காசி, ஆக்ரா, டெல்லி திரிவேணி சங்கமம், கயா மே 22, ஜூன் 19, ஜூலை 17
13 காசி, டெல்லி, அயோத்தி ஹரித்துவார், ஆக்ரா,-ஜூன் 3, செப். 23
15 நேபாள், முக்திநாத், காசி அயோத்தி - மே 10, செப். 20
16 பத்ரிநாத், கேதார்நாத் கங்கோதரி, யமுனோதரி மே 19, ஜூன் 7, ஜூலை 6
12 காஷ்மீர், டெல்லி வைஷ்ணவி தேவி - மே 10, 21
14 அமர்நாத், வைஷ்ணவி தேவி டெல்லி - ஜூலை 12, 22
15 பஞ்சதுவாரகா
13 ராஜஸ்தான்
9 இலங்கை-மே 15
6 அந்தமான்-ஆக.24
SRINIVASA TOUR 9384854569

இந்து தமிழ் திசை
பொறுப்பறிவிப்பு: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.ஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.
படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).